**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

S.C. 107/2018

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ம் நாள் செவ்வாய் கிழமை PW4 -இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc., B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

Deposition of LW4, Examined as PW4.

| | | |
|---|---|---|
| Date | : | 15.10.2024 |
| Name | : | பன்னீர்செல்வம் |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Religion | : | |
| Age | : | |

Accused present.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது பேரவூர் தஞ்சாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூல்டிரிங்ஸ் கடை வைத்திருக்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 2016 எனது கூல்டிரிங்ஸ் கடை அருகே சத்தம் கேட்டது வெளியே வந்து பார்த்தேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அனுமதி கோரியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>அரசுதரப்பு குறுக்குவிசாரணை</u>**

கடந்த 26.07.2014 ம் தேதி இரவு சுமார் 8 மணிக்கு நான் கூல்டிங்ஸ் கடையில் வியாபாரம் செய்து கொண்டிருந்த போது சீர்காழி காவல் நிலைய தலைமை காவலவர் நாகராஜன் மற்றும் சீர்காழி தனிபிரிவு சிறப்பு உதவி ஆய்வாளர் ஆனந்தன் என்பவரும் ரோந்து பணியில் இருந்தார்கள் என்றும், அந்த சமயம் பேருந்து நிலையத்தில் வடக்கு பக்கம் உள்ள ரமேஷ்குமார் என்பவர் கடையில் இலக்கியராஜ் என்பவர் நின்று கொண்டு சிகரெட் கட்டு கேட்டு தகராறு செய்து கொண்டிருந்தார்

அதனை கண்ட சீர்காழி தலைமை காவலர் நாகராஜன் மற்றும் ஆனந்தன் என்பவர் அங்கு வந்து தகராறு செய்து கொண்டிருந்த இலக்கியராஜியை பிடித்து விசாரணை செய்தார்கள் அப்போது இலக்கியராஜ் இடுப்பில் வைத்திருந்த கத்தியை காட்டி காமகுரோத வார்த்தைகளால் திட்டியதாகவும் அந்த கத்தியால் சிறப்பு உதவி ஆய்வாளர் ஆனந்தனின் உச்தந்தலையில் இத்தோடு ஒழிந்துபோட என்று தாக்கியதாகவும் மேற்படி சம்பவங்களை போலிஸ் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.